**மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் (மானியம் - 0486 எஸ்ஆர்ஜ) - 2021**

மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 0486-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் லங்கா எலெக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளன. மேல் மாகாணத்திலுள்ள புதுப்பிக்கத்தக்க சக்தி நுண் மின்சார விநியோக முறைமையொன்றை நிர்மாணிப்பதனூடாக கலப்பின புதுப்பிக்கத்தக்க சக்தி முறைமைகளை நிறுவுவதற்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். புதுப்பிக்கத்தக்க சக்தி நுண் மின்சார விநியோக முறைமையை நிறுவுதல் எனும் பெயரிலான கூறின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 268.36 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 1.8 மில்லியனானதுடன் முழுத் தொகையும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றுக்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகம் இடையேயான புரிந்துணர்வு விஞ்ஞாபனம். | | | |
| (i) 3.10 ஆம் பிரிவு | இந்தக் குழு ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் எதிர்வரும் ஆண்டிற்கான ஆராய்ச்சித் முன்மொழிவுகளைத் தொகுத்து, ஆராய்ச்சித் திட்டமொன்றையும் பாதீட்டையும் தயாரிக்கும். கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் ஏறக்குறைய பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் வரவிருக்கும் 2022 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சித் திட்டமும் பாதீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்ட போதிலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியை பெறுவதற்கான பொறிமுறையை இறுதி செய்யும் போது குழு ஆராய்ச்சித் திட்டமொன்றையும் பாதீட்டையும் வெளிப்படைத் தன்மையுடன் தயாரிக்க வேண்யுள்ளது. | நுண் மின்சார விநியோக ஆரம்ப செயற்திட்டத்தில் வெற்றி பெறுவதற்கு இரு தரப்பினருடன் இணங்கியவாறு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 07 ஆம் பிரிவு | புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை பிரதிபலிக்கும் ஒரு கூட்டு வேலை சட்ட ஒப்பந்தம், புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டு 3 மாதங்களுக்கு பிந்தாமல் தரப்பினர்களுக்கு இடையே கைச்சாத்திடப்படும். 2018 ஒக்தோபரில் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டு வேலை சட்ட ஒப்பந்தமொன்று தரப்பினரால் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையை இறுதி செய்வதற்கு சூரியசக்தி உற்பத்தியின் அளவீட்டு ஏற்பாடு, தயார்நிலை (Backup Generator) மின்பிறப்பாக்கி செயற்பாட்டு கிரயம் போன்றவை உட்பட அனைத்து தரப்பினராலும் R&D நிதி பொறிமுறை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தில் இணங்கப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

மேல் மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுண் மின்சார விநியோக முறைமையை நிறுவுவதன் மூலம் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைமைகளை நிறுவுவதற்கு ஆதரவாக ரூபா 268.36 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.8 மில்லியன் தொகைக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் லங்கா எலெக்ரிசிட்டி (பிறைவேட்) லிமிட்டட் ஆகியவற்றுடன் 2016 திசெம்பர் 19 இல் செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் லங்கா எலெக்ரிசிட்டி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையில் 2018 ஒக்தோபர் 16 இல் பல்கலைக்கழகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுண்-மின்சார விநியோக முறைமையை ஆரம்ப செயற்திட்டமாக நிறுவுவதற்கு புரிந்துணர்வு விஞ்ஞாபனம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்தல் திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுண் மின்சார விநியோக முறைமைபை நிறுவுதல் 2022 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், ஆரம்ப செயற்திட்டம் எதிர்கால ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான திட்டங்களைத் தயாரிக்கும் கட்டத்தில் மாத்திரமே இருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மொத்த மானியப் பெறுவனவுகள் | செயற்திட்டம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த மானிய பெறுவனவுகளில் ஐ.அ.டொலர் 1.16 மில்லியன் அல்லது 65 சதவீதத்தை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மைல்கற்களின் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னும் இடம்பெற்று வருகின்றன. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பணிகள் மற்றும் ஆலோசனை சேவைகள் | மொத்த மானியத் பெறுவனவுகளில், ஐ.அ.டொலர் 1.5 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 0.3 மில்லியன் தொகைகள் முறையே வேலைக் கூறு மற்றும் ஆலோசனை சேவைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வேலைக் கூறிற்கு ஐ.அ.டொலர் 1.05 மில்லியன் அல்லது 70 சதவீதத்தை பயன்படுத்தியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆலோசனை சேவைகளுக்காக ஐ.அ.டொலர் 0.109 மில்லியன் அல்லது 37 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உள்ளூர் ஆலோசகர் இந்த செயற்பாட்டில் அதிகம் ஈடுபடவில்லை, எனவே அவரது பாதீடு குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுத்தப்படவில்லை. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நுண் மின்சார விநியோகம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகூடத்தை நிறுவுதல் | திருத்தப்பட்ட செயற்திட்ட அட்டவணையின் பிரகாரம் நுண் மின்சார விநியோக மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வுகூடத்தினை நிறுவும் நடவடிக்கைகள் முறையே 2021 செப்தெம்பர் 01 மற்றும் 2021 யூலை 07 அளவில் பூர்த்தி செய்யப்பட்டு முழு செயற்திட்டமும் 2021 நவம்பர் 30 அளவில் கையளிப்பதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.<br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் wireless தொடர்பாடல் முறைமை தவிர அனைத்து உபகரணங்களின் நிறுவுதலும் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நுண் மின்சார விநியோக பணியை ஒதுக்கி செயற்பாட்டு சோதனையிடல் கணக்காய்வு திகதியான 2022 மே 20 இல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனினும், முழு செயற்திட்டமும் கணக்காய்வு திகதி வரையிலும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றும் வரை செயற்திட்டம் LECO ஆல் கையேற்கப்படமாட்டாது. தற்போது, கட்டாய செயற்பாட்டு காலப்பகுதி முன்னேற்றத்தில் உள்ளதுடன் இந்த செயற்பாட்டு காலப்பகுதிக்குப் பின்னர் LECO செயற்திட்டத்தைக் கையேற்கும். | செயற்திட்டத்தின் செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரரின் செயற்பாடுகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுண் மின்சார விநியோக ஆரம்ப செயற்திட்டத்தின் வடிவமைப்பு, நிர்மாணம், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதலிற்கு தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர், நுண் மின்சார விநியோக முறைமை செயற்பாட்டின் இரண்டு ஆண்டுகளுக்கு கட்டாய உதிரிப்பாகங்களுக்கு கூறுவிலையை குறிப்பிட்டிருக்கவில்லை. எனினும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் மேலே உள்ள கேள்வி உருப்படிகளுக்கு ஏற்புடைய தீர்வுக்கு உட்பட்டு கேள்வியை பரிந்துரைத்தது. பின்னர், கூறுவிலை குறிப்பிடப்பட்ட ஏனைய கட்டாய உதிரிப்பாகங்களுக்கு ஒப்பந்ததாரர் இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட உத்தரவாதங்களை வழங்கியதால், 2020 பெப்ரவரி 11 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்ததாரருடன் நடாத்தியிருந்த கூட்டங்களில் ஒன்றில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டிருந்தது. குறிப்பிடப்பட்ட உபகரணங்களுக்கு அவர்கள் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட உத்தரவாதங்களை வழங்கியுள்ளதால் இரண்டு வருடங்களுக்கான உதிரிப்பாகங்களுக்கான கிரயமும் சலுகையுடன் சேர்க்கப்பட்டுள்ளது என கருதப்படுகின்றது. | நுண் மின்சார விநியோக முறைமையின் இரண்டு வருட செயற்பாட்டிற்கு கேள்விதாரர் கட்டாய உதிரி பாகங்களை வழங்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், வழங்குநரால் இணங்கப்பட்ட உத்தரவாதக் காலப்பகுதியுடன் சேர்த்து இந்த விடயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |